# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

வகுப்பு : 11

## வணிகவியல்

பதிவு எண் :

காலம் : 1.30 மணி

மொத்த மதிப்பெண்கள் : 50

### பிரிவு - I

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்.** **10X1=10**

1. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ________ பங்களிப்பு இன்றியமையாதவை.

   அ) தொழில்துறை உற்பத்தி ஆ) ஏற்றுமதி

   இ) வேலைவாய்ப்பு ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது

   அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை

   இ) வணிகம் ஈ) வர்த்தகம்

3. வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர் _______

   அ) தரகர் ஆ) கழிவு முகவர்

   இ) விற்பனை முகவர் ஈ) இருப்பு வைத்திருப்பவர்

4. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருள்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் _________

   அ) சந்தை வியாபாரிகள் ஆ) ஒரே வகை பண்டகச்சாலைகள்

   இ) பொதுப் பண்டகச் சாலைகள் ஈ) தெருக் கடை வியாபாரிகள்

5. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது

   அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்

   இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

6. STC யின் விரிவாக்கம்

   அ) மாநில பயிற்சி மையம் ஆ) மாநில பயிற்சி சபை

   இ) மாநில வணிக மையம் ஈ) மாநில வணிக கழகம்

7. சுங்க வரிகள் மற்றும் வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு

   அ) 30 அக்டோபர் 1947 ஆ) 29 அக்டோபர் 1947

   இ) 28 அக்டோபர் 1947 ஈ) 26 அக்டோபர் 1947

8. செலுத்து சமநிலையின் உபரி வெளிக்காட்டுவது

   அ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்

   ஆ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்

   இ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமநிலைக்கு அதிகமாக இருத்தல்

   ஈ) இவையனைத்தும்



Padasalai.Net

9. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) நியூயார்க் ஆ) இலண்டன்

இ) ஜெனிவா ஈ) பிரேசில்

10. உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ____ எனப்படும்.

அ) உள்நாட்டு வியாபாரம் ஆ) ஏற்றுமதி

இ) அயல்நாட்டு வியாபாரம் ஈ) இணைவினை

## பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண்.16க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **5x2=10**

11. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் (NEEDS) என்ன?
12. வணிக முகவர்களின் வகைகள் யாவை?
13. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?
14. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
15. உலக வங்கி என்பதன் பொருள் யாது?
16. செலுத்தல் சமநிலை என்றால் என்ன?

## பிரிவு - III

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண்.22க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **5x3=15**

17. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரி.
18. உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை? விளக்குக.
19. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3)
20. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.
21. நடப்புக் கணக்கின் வரவுப் பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை? (ஏதேனும் 3)
22. இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் யாவை? (ஏதேனும் 3)

## பிரிவு - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x5=15**

23. (அ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)

**(அல்லது)**

(ஆ) மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை? (ஏதேனும் 5)

24. (அ) துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளை விவரி.

**(அல்லது)**

(ஆ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

25. (அ) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**(அல்லது)**

(ஆ) முத்ரா வங்கி - விளக்குக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com